| இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025 | தேர்வு எண் |
|---|---|
| காலம் : 3-00 மணி **பத்தாம் வகுப்பு - தமிழ்** | மதிப்பெண் : 100 |

பகுதி - 1 (மதிப்பெண்கள் - 15)

*குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* **(15×1=15)**

*2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.*

1. "மெத்த வணிகலன்" என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது ________
   அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங்காப்பியங்களும்
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. "சிவப்புச் சட்டை பேசினார்" - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
3. காசிக்காண்டம் என்பது
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
   ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
   ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
4. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
5. "உனக்கு கதை எழுதத் தெரியுமா?" என்ற வினாவிற்குக் கட்டுரை எழுதத் தெரியும் என்று கூறுவது ________
   அ) ஏவல் விடை ஆ) உறுவது கூறல் விடை
   இ) சுட்டு விடை ஈ) இனமொழி விடை
6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
   ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
   ஈ) அங்கு வறுமை இல்லாததால்
7. **கூற்று** 1: போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்
   **கூற்று** 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது
   அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
   இ) கூற்று 1 தவறு 2 சரி ஈ) கூற்று 1 மற்றும் 2 சரி
8. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ________
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
9. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
   மேன்மேலும் முகமலரும் மேலோர் போல"- என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல்
   அ) கலிங்கத்துப்பரணி ஆ) கம்பராமாயணம்
   இ) புறநானூறு ஈ) நற்றிணை
10. தொகைநிலைத் தொடர் ________ வகைப்படும்
    அ) ஆறு ஆ) எட்டு இ) ஏழு ஈ) ஐந்து
11. "பிரிந்தன புள்ளின் <u>கானில்</u>
    பெரிதழுது இரங்கித் <u>தேம்ப</u>"
    *-பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க*
    அ) கிளை, துளை ஆ) நிலம், வாட
    இ) காடு, வாட ஈ) காடு, நிலம்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

**கீழ்காணும் பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

"பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும்
தொலைந்ததே வாழ்வு என
தலையில், கைவைத்து
புலம்புவார் பூமியிலே"

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொல்
அ) பொற்காலமாக, இவள் தலையில்
ஆ) பொற்காலமாக, கற்காலம் தான்
இ) பொற்காலமாக, தொலைந்ததே
ஈ) பொற்காலமாக, தலையில்

13. *பிரித்து எழுதுக* - கற்காலம்
அ) கல் + காலம் ஆ) கற் + காலம் இ) கட் + காலம் ஈ) க + காலம்

14. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கண்ணதாசன் ஆ) உமா மகேஸ்வரி
இ) வீரமாமுனிவர் ஈ) நாகூர் ரூமி

15. இப்பாடல் இடம்பெறும் தலைப்பு ________
அ) ஏர்புதிதா? ஆ) மெய்க்கீர்த்தி இ) சித்தாளு ஈ) தேம்பாவணி

**பகுதி -2 (மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு - 1**

***குறிப்பு: ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 21) (4x2=8)***

16. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?

17. ***விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.***
அ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் "வாழையிலை விருந்து விழாவை" ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது
ஆ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா

18. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

19. ***பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.***
அ) உழவர்கள் மலையில் உழுதனர்
ஆ) முல்லைப் பூச்செடியை பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்

20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21. 'விடும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

***குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். (5x2=10)***

22. 'வாழ்க' பகுபத உறுப்பிலக்கணம் தருக.

23. கூட்டப்பெயர்களை எழுதுக. கல், ஆக, கீரை, மக்கள்

24. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

25. ***கலைச்சொற்கள் தருக:*** அ) Vowel ஆ) Storyteller

26. ***பழமொழிகளை நிறைவு செய்க.*** அ) ஒரு பானை ________
ஆ) விருந்தும் ________

27. ***தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.***
**(சோறு, கற்றல், பூவில், எழுத்து)**
அ) நூலின் பயன்படித்தல் எனில், கல்வியின் பயன் ________
ஆ) மீன் இருப்பது நீரில், தேன் இருப்பது ________



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

28. *ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.*
அ) நாகப்பட்டினம் ஆ) புதுக்கோட்டை

## பகுதி - 3 (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

*குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு சுருக்கமாக விடையளிக்க.* **(2x3=6)**

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது, - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

30. *உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*
அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது, அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.
அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?
ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?
இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

### பிரிவு - 2

*குறிப்பு: ஏதேனும் 2 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாய வினா 34)* **(2x3=6)**

32. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா.கவிபாடுகிறார்?

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. *அடிபிறழாமல் எழுதுக.*
அ) 'சிறுதாம்பு தொடுத்த' ..... எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

*(அல்லது)*

ஆ) 'மாற்றம் எனது மானிடத்தத்துவம்' ... எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்.

### பிரிவு - 3 **(2x3=6)**

*குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.*

35. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!"
*- இத்தாலாட்டு பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.*

36. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்
*- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.*

37. நிரல்நிறை அணியை விளக்குக.

## பகுதி - 4 (மதிப்பெண்கள் : 25)

*குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.* **(5x5=25)**

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

*(அல்லது)*

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

39. அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் 'நாட்டு நலப்பணித் திட்ட முகாமின்' தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

40. ***காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.***



41. எண் 15, அடப்பன் வயல், புதுகை மாவட்டத்தில் வசிக்கும் கண்ணனின் மகள் கனிமொழி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர் தன்னை கனிமொழியாகக் கருதி பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் நீ கடைபிடிக்கக் கூடிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.

*(அல்லது)*

ஆ) ***மொழிபெயர்க்க.***

i) If you talk to a man in a language he understands that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.

***- Nelson Mandela***

ii) Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going

***- Rita Mae Brown***

**பகுதி - 5 (மதிப்பெண்கள் : 24)**

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க.*** ***(3x8=24)***

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக.

*(அல்லது)*

ஆ) ஜெயக்காந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. அ) 'கற்கை நன்றே கற்றை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துக்களை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன.

45. அ) 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.



www.Padasalai.Net
Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com